# P5 / P6 GEAR UP UR MCQ COMPREHENSION SKILLS (PAPER 2)
## P5 / P6 சிறப்புத் தேர்ச்சிக்கான முன்னுணர்வு & தெரிவுவிடைக் கருத்தறிதல் பயிற்சித்தாள் (தாள் 2)

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| | முன்னுணர்வுக் கருத்தறிதல் | |
| 1 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 1 | 1 - 1 |
| 2 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 2 | 2 - 2 |
| 3 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 3 | 3 - 4 |
| 4 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 4 | 4 - 5 |
| 5 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 5 | 5 - 6 |
| 6 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 6 | 6 - 7 |
| 7 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 7 | 7 - 8 |
| 8 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 8 | 9 - 10 |
| 9 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 9 | 10 - 11 |
| 10 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 10 | 11 - 12 |
| 11 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 11 | 12 - 13 |
| 12 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 12 | 14 - 15 |
| 13 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 13 | 15 - 16 |
| 14 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 14 | 16 - 17 |
| 15 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 15 | 17 - 18 |
| 16 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 16 | 19 - 20 |
| 17 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 17 | 20 - 21 |
| 18 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 18 | 21 - 22 |
| 19 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 19 | 22 - 23 |
| 20 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 20 | 23 - 24 |
| 21 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 21 | 25 - 25 |
| 22 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 22 | 26 - 27 |
| 23 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 23 | 27 - 28 |
| 24 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 24 | 28 - 29 |
| 25 | முன்னுணர்வுக் கருத்தறிதல் 25 | 29 - 30 |
| | தெரிவுவிடைக் கருத்தறிதல் | |
| 1 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 1 | 31 - 33 |
| 2 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 2 | 33 - 35 |
| 3 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 3 | 35 - 37 |
| 4 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 4 | 37 - 39 |
| 5 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 5 | 40 - 42 |
| 6 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 6 | 42 - 44 |
| 7 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 7 | 44 - 46 |
| 8 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 8 | 46 - 48 |


WORDSMITH BEYOND LEARNING

| | | |
|---|---|---|
| 9 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 9 | 49 - 51 |
| 10 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 10 | 51 - 53 |
| 11 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 11 | 53 - 55 |
| 12 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 12 | 55 - 57 |
| 13 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 13 | 57 - 59 |
| 14 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 14 | 60 - 62 |
| 15 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 15 | 62 - 64 |
| 16 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 16 | 64 - 66 |
| 17 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 17 | 67 - 69 |
| 18 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 18 | 69 - 71 |
| 19 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 19 | 71 - 73 |
| 20 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 20 | 74 - 76 |
| 21 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 21 | 76 - 78 |
| 22 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 22 | 78 - 80 |
| 23 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 23 | 80 - 82 |
| 24 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 24 | 83 - 85 |
| 25 | தெரிவுவிடைக் கருத்தறிதல் 25 | 85 - 87 |
| | **அருஞ்சொற்பொருள்** | |
| 1 | முன்னுணர்வுக் கருத்தறிதல் | 88 - 94 |
| 2 | தெரிவுவிடைக் கருத்தறிதல் | 94 - 102 |
| | **விடைத்தாள்** | |
| 1 | முன்னுணர்வுக் கருத்தறிதல் விடைகள் | 103 |
| 2 | தெரிவுவிடைக் கருத்தறிதல் விடைகள் | 104 |


WORDSMITH
SKILLS = grades + achieve Big

## முன்னுணர்வுக் கருத்தறிதல் 1

**Q1 முதல் Q5 வரையுள்ள கோடிட்ட இடத்தை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லை, கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)**

கந்தன், மாணிக்கம், பாலா மூவரும் ஒரே பள்ளியில் படிக்கும் மாணவர்கள். அவர்கள் Q1. ________________ மட்டுமின்றி விளையாட்டிலும் **<u>கெட்டிக்காரர்களாக</u>** இருந்தார்கள். பள்ளியில் அனைத்துத் தேர்வுகளிலும் "நீ, நான்" என்று போட்டி போட்டுக்கொண்டு முதலிடம் பிடிப்பவர்கள். திரு சுந்தரம் இவர்களின் வகுப்பாசிரியர். திரு சுந்தரம் என்றால் அனைத்து மாணவர்களுக்கும் கொள்ளைப் **<u>பிரியம்</u>**. அவர் மாணவர்களுக்கு Q2. ___________________ பாடம் நடத்துவார். அவர் புரியும்படி உதாரணங்கள் சொல்லிப் பாடத்தை விளக்குவார். கணினியின் வழி அவர் பல **<u>புதிர்</u>**களை நடத்தி மாணவர்களுக்கு ஆர்வமூட்டுவார்.

மேலும், அவர் மாணவர்களை விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்துகொள்ள **<u>ஊக்குவிப்பார்.</u>** மாணவர்களிடம் 'வெற்றி என்பது Q3. _________________ தோல்வி என்பது கற்றுக்கொள்வதற்கும்' என்றும் அவர் கூறுவார். மாணவர்களும் ஆசிரியர் கூறியதைக் கவனத்தில் கொண்டு தங்களது பள்ளியைப் **<u>பிரதிநிதித்து</u>** விளையாடி வெற்றி பெற்று ஆசிரியரைப் பெருமைப்படுத்துவார்கள். Q4. _________________ எல்லா மாணவர்களும் அவரை மிகவும் விரும்புவார்கள். மாணவர்கள் அவரது வகுப்பை ஆவலுடன் Q5. _________________. ஒரு நாள் திரு சுந்தரம் மாணவர்களிடம், "பிள்ளைகளே! இன்று ஒரு போட்டி வைக்கப்போகிறேன்." என்றார். அதைக் கேட்டதும், "ஓ!" என்று மாணவர்கள் மகிழ்ச்சியுடன் குரல் எழுப்பினார்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Q1 | 1. | தேர்வில் | 3. | படிப்பில் | |
| | 2. | கவனிப்பதில் | 4. | பேசுவதில் | (     ) |
| Q2 | 1. | எளிமையாக | 3. | இனிமையாக | |
| | 2. | கடுமையாக | 4. | சுவையாக | (     ) |
| Q3 | 1. | கலந்துகொள்வதற்கும் | 3. | பார்த்துக்கொள்வதற்கும் | |
| | 2. | பெற்றுக்கொள்வதற்கும் | 4. | புரிந்துகொள்வதற்கும் | (     ) |
| Q4 | 1. | மேலும் | 3. | அவ்வாறு | |
| | 2. | ஆனால் | 4. | அதனால் | (     ) |
| Q5 | 1. | சார்ந்திருப்பார்கள் | 3. | சேர்ந்திருப்பார்கள் | |
| | 2. | எதிர்பார்ப்பார்கள் | 4. | அமர்ந்திருப்பார்கள் | (     ) |

# தெரிவுவிடைக் கருத்தறிதல்

## தெரிவுவிடைக் கருத்தறிதல் 1

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி.**

தோட்ட முதலாளி ஒருவரிடம் பல ஆட்கள் வேலை செய்து வந்தனர். அவர் ஒரு நாள் தன் தோட்டத்தைச் சுற்றிப்பார்த்துவிட்டுக் களைத்துப்போய் வந்தார். அப்போது வேலையாட்களில் சிலர் பலவகையான பழங்களைச் சிறு துண்டுகளாக வெட்டித் தட்டில் அழகாக வைத்திருந்தார்கள். எல்லாவற்றையும் பார்த்த முதலாளி வெட்டப்பட்டிருந்த அன்னாசிப்பழத் துண்டுகளை ஆவலோடு எடுத்துச் சாப்பிட்டார். "ஆகா என்ன ருசி! என்ன இனிப்பு! பழங்களிலேயே சிறந்தது அன்னாசிதான்" என்று பாராட்டினார். பக்கத்தில் இருந்த வேலையாட்களில் ஒருவன் உடனே, "ஆமாம், முதலாளி! நீங்கள் சொல்வது <u>**முற்றிலும்**</u> உண்மை. இதுதான் <u>**ராஜகனி**</u>. அதனால்தான் அதன் தலையில் இறைவன் <u>**கிரீடத்தை**</u> வைத்துள்ளான்" என்றான். முதலாளி உடனே "இனிமேல் என் உணவில் அன்றாடம் அன்னாசிப்பழம் இடம்பெற வேண்டும்," என்று கட்டளையிட்டார்.

தினந்தோறும் அன்னாசிப்பழம் முதலாளிக்குப் <u>**பரிமாறப்பட்டது**</u>. அதனையே சாப்பிட்டுச் சாப்பிட்டு அவருக்கு <u>**அலுத்துவிட்டது**</u>. அவரால் பொறுக்க முடியவில்லை. ஒரு நாள் சாப்பாட்டிலும் அன்னாசி இருப்பதைப் பார்த்ததும் அவருக்குக் கடுங்கோபம் வந்துவிட்டது. "சே! இது ஒரு பழமா? இதை மனிதன் சாப்பிடுவானா?" என்று சத்தம் போட்டார். பக்கத்தில் நின்று கொண்டிருந்த வேலையாட்களில் ஒருவன் உடனே "ஆமாம் முதலாளி! பழங்களிலே மோசமான பழம் அன்னாசிதான். பாருங்கள், இதன் தோலைக் கடவுளே <u>**தடிமனாக**</u> வைத்திருக்கிறான். அன்னாசிப் பழத்தை இனிமேல் நாம் சாப்பிடவே கூடாது" என்றான்.

முதலாளி அந்த வேலையாளைப் பார்த்து "அன்றைக்கு அன்னாசிப்பழத்தை ராஜகனி என்றாய். இன்று மோசமான கனி என்கிறாயே!" என்று கோபமாகக் கேட்டார். அதற்கு வேலையாள், "முதலாளி! நான் உங்களிடம் வேலைபார்ப்பவன். உங்கள் எண்ணம்தான் என் எண்ணம். உங்கள் ***எண்ணத்துக்கு*** மாறாக நான் நடக்க முடியுமா?" என்று பணிவாகப் பதில் கூறினான். இக்கதையில் உள்ளதுபோல் சிலர் ஆளுக்குத் தகுந்த மாதிரியும் நேரத்துக்கு ஏற்றது போலவும் பேசுகிறார்கள். அவர்களைத்தான் இவ்வுலகம் பிழைக்கத் தெரிந்தவர்கள் என்று கூறுகிறது. ஆனால், இந்த வழியில் போனால் நம்முடைய சிறந்த குணமோ அல்லது தனித்தன்மையோ காணாமல்

போய்விடும். நாம் நேர்மையாகவும் உண்மையாகவும் இருக்கும்போது கிடைக்கும் வெற்றியே என்றும் **நிரந்தரமாக** இருக்கும்.

**Q1 முதல் Q4 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது. (8 மதிப்பெண்கள்)**

Q1 முதலாளி தோட்டத்தைச் சுற்றிப்பார்த்துவிட்டுக் களைப்பாக வந்தபோது எவற்றைப் பார்த்தார்?

1. பலவகையான பழங்கள் வெட்டப்பட்டிருந்ததை
2. பழங்கள் அழகாகக் கட்டப்பட்டிருந்ததை
3. அன்னாசிப்பழம் வெட்டப்பட்டிருந்ததை
4. இனிப்பான பழங்கள் வைக்கப்பட்டிருந்ததை ( )

Q2 அன்னாசிப்பழம் சிறந்தது என்று வேலையாள் ஏன் கூறினான்?

1. அது மிகவும் சுவையாக இருப்பதால்
2. அது உயர்ந்த பழம் என்பதால்
3. அது முட்கள் மிகுந்த பழம் என்பதால்
4. அது தன் தலையில் கிரீடம் வைத்திருப்பதால் ( )

Q3 அன்னாசிப்பழம் மோசமானது என்பதற்கு வேலையாள் இறுதியில் கூறிய காரணம் என்ன?

1. அது சலித்துப்போனதே
2. அது தடிமனான தோலைக் கொண்டிருப்பதே
3. அது சுவையற்ற பழம் என்பதே
4. அது கசப்பான பழம் என்பதே ( )

Q4 யாரெல்லாம் இவ்வுலகில் பிழைக்கத் தெரிந்தவர்கள் என்று கூறப்படுகிறது?

1. மற்றவர்களிடம் திறமையாகப் பேசுபவர்கள்
2. ஆளுக்குத் தகுந்ததுபோல் பேசுபவர்கள்
3. நேரத்திற்குத் தகுந்ததுபோல் பேசுபவர்கள்
4. ஆளுக்கும் நேரத்திற்கும் தகுந்ததுபோல் பேசுபவர்கள் ( )

WORDSMITH LEARNING
achieve

## சொற்பொருள்

**வினா Q5-இல் இடம்பெற்றுள்ள சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லை, கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (2 மதிப்பெண்கள்)**

Q5 எண்ணத்துக்கு

| | | | |
|---|---|---|---|
| 1. | சொல்லுக்கு | 3. | சிந்தனைக்கு |
| 2. | ஆணைக்கு | 4. | அறிவுக்கு ( ) |

## தெரிவுவிடைக் கருத்தறிதல் 2

**பின்வரும் பகுதியைக் கருத்தூன்றிப் படி.**

ஆணவம் மிகுந்த பணக்காரர் ஒருவர் பெரிய மாட்டுப்பண்ணை ஒன்றை வைத்திருந்தார். அங்கே நிறையப் பேர் தங்கி வேலை பார்த்து வந்தார்கள். அவர் தன்னை எல்லாரும் மதிக்கவேண்டும் என்றும் தன்னைப் பார்க்கும்போதெல்லாம் அவர்கள் வணங்கவேண்டும் என்றும் நினைத்தார். அதனால் அவர்களும் அவரைப் பார்க்கும்போதெல்லாம் தங்கள் இரு கைகளைக் ***குவித்து***, உடலை வளைத்துப் பணிவுடன் வணக்கம் செலுத்திக்கொண்டிருந்தார்கள். "எந்த வேலையாக இருந்தாலும், என்னைக் கண்டதும் உடனே வணங்கவேண்டும். இல்லையென்றால் கடுமையான தண்டனை கிடைக்கும். இது என் **கட்டளை**" என்று அவர் கூறியிருந்தார்.

ஒரு நாள் வேலையாட்கள் புல்வெளியில் மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார்கள். அதைப் பார்வையிட வந்த பணக்காரர் எதிர்பாராத விதமாக அங்கிருந்த தண்ணீரில்லாத **கிணற்றில்** தவறி விழுந்துவிட்டார். அப்போது **பதறிப்போன** வேலையாட்களில் ஒருவன் ஓடிச்சென்று கயிறு ஒன்றை எடுத்து வந்து கிணற்றில் விட்டான். பணக்காரர் கயிற்றின் ஒரு முனையை இறுகப் பிடித்துக்கொள்ள அங்கிருந்த வேலையாட்கள் கயிற்றின் மறுபக்கத்தைப் பிடித்து இழுத்தார்கள். இன்னும் இரண்டடி தூரம் இழுத்தால் அவரைக் காப்பாற்றி விடலாம் என்னும் நிலையில், இழுத்துக்கொண்டிருந்த வேலையாட்கள் அவரைக் கண்டனர். உடனே கயிற்றை விட்டுவிட்டுத் தங்கள் கைகளைக் கூப்பிப் பணிவாக வணங்கினர்.

அவர்கள் கயிற்றை விட்டுவிட்டதால், பணக்காரர் மீண்டும் கிணற்றுக்குள் விழுந்தார். அவர் உடலெங்கும் காயம் ஏற்பட்டது. இரண்டாம் முயற்சியிலும் அவர்கள் அவ்வாறே செய்தனர். படுகாயம் அடைந்த பணக்காரர் "இன்னும் ஒரு முறை விழுந்தால் நான் இறந்து போவேன். எனக்கு உதவுங்கள். என்னைக் கண்டதும் வணங்க வேண்டாம்" என்று **அலறினார்.** அவர்கள் அவ்வாறே செய்து அவரை

**சிகரம் - P5 / P6 சிறப்புத் தேர்ச்சிக்கான முன்னுணர்வு & தெரிவுவிடைக் கருத்தறிதல் பயிற்சித்தாள்**

# அருஞ்சொற்பொருள்

| முன்னுணர்வுக் கருத்தறிதல் 1 | | | |
|---|---|---|---|
| **எண்** | **அருஞ்சொல்** | **பொருள்** | **English Meaning** |
| 1. | கெட்டிக்காரர்களாக | திறமையாளர்களாக | Talented |
| 2. | பிரியம் | அன்பு | Love |
| 3. | புதிர் | விடுகதை | Puzzle |
| 4. | ஊக்குவிப்பார் | உற்சாகப்படுத்துவார் | One who encourages |
| 5. | பிரதிநிதித்து | சார்பில் பேசு | Represent |
| **முன்னுணர்வுக் கருத்தறிதல் 2** | | | |
| **எண்** | **அருஞ்சொல்** | **பொருள்** | **English Meaning** |
| 1. | ஊர்த்தலைவர் | - | Village chief |
| 2. | குதிரைவண்டி | - | Horse cart |
| 3. | அறியாமல் | தெரியாமல் | Unknowingly |
| 4. | திடுக்கிட்டு | அதிர்ச்சி அடைந்து | Shocked |
| 5. | சம்மதித்தார் | ஒத்துக்கொண்டார் | Agreed |
| **முன்னுணர்வுக் கருத்தறிதல் 3** | | | |
| **எண்** | **அருஞ்சொல்** | **பொருள்** | **English Meaning** |
| 1. | விவசாயி | உழவன் | Farmer |
| 2. | விடியற்காலையில் | அதிகாலையில் | Early morning |
| 3. | கூவ | சத்தமிட | To make sound |
| 4. | உறக்கத்தை | தூக்கத்தை | Sleep |
| 5. | தொடங்கினான் | ஆரம்பித்தான் | Began |
| **முன்னுணர்வுக் கருத்தறிதல் 4** | | | |
| **எண்** | **அருஞ்சொல்** | **பொருள்** | **English Meaning** |
| 1. | சுயநலமிக்க | தன்னலமிக்க | Selfish |
| 2. | பிச்சைக்காரன் | - | Beggar |

WORDSMITH BEYOND LEARNING

விடைத்தாள்

**சிகரம் - P5 / P6 சிறப்புத் தேர்ச்சிக்கான முன்னுணர்வு & தெரிவுவிடைக் கருத்தறிதல் பயிற்சித்தாள்**

**முன்னுணர்வுக் கருத்தறிதல் விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| **பயிற்சி 1** | **பயிற்சி 6** | **பயிற்சி 11** | **பயிற்சி 16** | **பயிற்சி 21** |
| Q1 3 | Q1 2 | Q1 3 | Q1 2 | Q1 4 |
| Q2 1 | Q2 4 | Q2 4 | Q2 2 | Q2 2 |
| Q3 2 | Q3 3 | Q3 2 | Q3 1 | Q3 1 |
| Q4 4 | Q4 2 | Q4 4 | Q4 2 | Q4 3 |
| Q5 2 | Q5 4 | Q5 1 | Q5 1 | Q5 2 |
| **பயிற்சி 2** | **பயிற்சி 7** | **பயிற்சி 12** | **பயிற்சி 17** | **பயிற்சி 22** |
| Q1 2 | Q1 1 | Q1 1 | Q1 4 | Q1 2 |
| Q2 1 | Q2 1 | Q2 4 | Q2 1 | Q2 2 |
| Q3 4 | Q3 4 | Q3 3 | Q3 3 | Q3 3 |
| Q4 1 | Q4 2 | Q4 2 | Q4 1 | Q4 3 |
| Q5 2 | Q5 1 | Q5 3 | Q5 3 | Q5 1 |
| **பயிற்சி 3** | **பயிற்சி 8** | **பயிற்சி 13** | **பயிற்சி 18** | **பயிற்சி 23** |
| Q1 3 | Q1 2 | Q1 2 | Q1 1 | Q1 2 |
| Q2 1 | Q2 4 | Q2 1 | Q2 1 | Q2 2 |
| Q3 3 | Q3 2 | Q3 3 | Q3 4 | Q3 1 |
| Q4 3 | Q4 1 | Q4 2 | Q4 2 | Q4 3 |
| Q5 2 | Q5 3 | Q5 4 | Q5 3 | Q5 2 |
| **பயிற்சி 4** | **பயிற்சி 9** | **பயிற்சி 14** | **பயிற்சி 19** | **பயிற்சி 24** |
| Q1 2 | Q1 4 | Q1 2 | Q1 4 | Q1 2 |
| Q2 1 | Q2 3 | Q2 3 | Q2 2 | Q2 1 |
| Q3 2 | Q3 1 | Q3 4 | Q3 1 | Q3 3 |
| Q4 3 | Q4 2 | Q4 3 | Q4 3 | Q4 4 |
| Q5 2 | Q5 4 | Q5 1 | Q5 1 | Q5 1 |
| **பயிற்சி 5** | **பயிற்சி 10** | **பயிற்சி 15** | **பயிற்சி 20** | **பயிற்சி 25** |
| Q1 2 | Q1 1 | Q1 1 | Q1 3 | Q1 2 |
| Q2 2 | Q2 1 | Q2 2 | Q2 2 | Q2 2 |
| Q3 1 | Q3 4 | Q3 4 | Q3 3 | Q3 1 |
| Q4 2 | Q4 3 | Q4 3 | Q4 1 | Q4 4 |
| Q5 4 | Q5 2 | Q5 1 | Q5 4 | Q5 3 |

**தெரிவுவிடைக் கருத்தறிதல் விடைகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| **பயிற்சி 1**<br>Q1 1<br>Q2 4<br>Q3 2<br>Q4 4<br>Q5 3 | **பயிற்சி 6**<br>Q1 3<br>Q2 4<br>Q3 2<br>Q4 4<br>Q5 1 | **பயிற்சி 11**<br>Q1 1<br>Q2 2<br>Q3 1<br>Q4 3<br>Q5 4 | **பயிற்சி 16**<br>Q1 4<br>Q2 3<br>Q3 4<br>Q4 2<br>Q5 2 | **பயிற்சி 21**<br>Q1 2<br>Q2 3<br>Q3 4<br>Q4 2<br>Q5 2 |
| **பயிற்சி 2**<br>Q1 3<br>Q2 1<br>Q3 4<br>Q4 3<br>Q5 2 | **பயிற்சி 7**<br>Q1 2<br>Q2 3<br>Q3 1<br>Q4 4<br>Q5 4 | **பயிற்சி 12**<br>Q1 3<br>Q2 4<br>Q3 3<br>Q4 2<br>Q5 4 | **பயிற்சி 17**<br>Q1 2<br>Q2 4<br>Q3 3<br>Q4 1<br>Q5 2 | **பயிற்சி 22**<br>Q1 2<br>Q2 1<br>Q3 2<br>Q4 4<br>Q5 3 |
| **பயிற்சி 3**<br>Q1 4<br>Q2 3<br>Q3 1<br>Q4 4<br>Q5 2 | **பயிற்சி 8**<br>Q1 4<br>Q2 2<br>Q3 1<br>Q4 3<br>Q5 2 | **பயிற்சி 13**<br>Q1 3<br>Q2 1<br>Q3 2<br>Q4 4<br>Q5 3 | **பயிற்சி 18**<br>Q1 2<br>Q2 4<br>Q3 1<br>Q4 4<br>Q5 4 | **பயிற்சி 23**<br>Q1 3<br>Q2 4<br>Q3 1<br>Q4 1<br>Q5 3 |
| **பயிற்சி 4**<br>Q1 3<br>Q2 1<br>Q3 4<br>Q4 3<br>Q5 4 | **பயிற்சி 9**<br>Q1 3<br>Q2 2<br>Q3 4<br>Q4 1<br>Q5 2 | **பயிற்சி 14**<br>Q1 2<br>Q2 3<br>Q3 3<br>Q4 1<br>Q5 1 | **பயிற்சி 19**<br>Q1 1<br>Q2 3<br>Q3 4<br>Q4 2<br>Q5 2 | **பயிற்சி 24**<br>Q1 3<br>Q2 4<br>Q3 3<br>Q4 3<br>Q5 3 |
| **பயிற்சி 5**<br>Q1 4<br>Q2 3<br>Q3 2<br>Q4 3<br>Q5 1 | **பயிற்சி 10**<br>Q1 2<br>Q2 3<br>Q3 1<br>Q4 2<br>Q5 3 | **பயிற்சி 15**<br>Q1 3<br>Q2 1<br>Q3 3<br>Q4 3<br>Q5 1 | **பயிற்சி 20**<br>Q1 3<br>Q2 4<br>Q3 4<br>Q4 2<br>Q5 1 | **பயிற்சி 25**<br>Q1 3<br>Q2 4<br>Q3 2<br>Q4 3<br>Q5 3 |

WORDSMITH BEYOND LEARNING